திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகருக்கு இப்படித் தனி மின்சார இணைப்புகள் வழங்குவது குறித்து அறிவித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போன்று வாணியம்பாடி நகரிலும் தோல் பதனிடும் தொழிற்சாலையின் அதிபர்கள் இப்படித் தனி இணைப்புகள் வேண்டும் என்று கேட்க முன் வருவார்களேயானால் அரசு அதைச் செய்து தர ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

திரு. ந. குலசேகரபாண்டியன் : தலைவரவர்களே, இப்படி ஆம்பூர் நகரிலுள்ள தொழிற்சாலைகளுக்குத் தனியாக இணைப்புகள் வழங்குவதன் மூலம் அரசுக்கு ஏற்படும் மொத்தச் செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதிலே, அரசுக்குச் செலவு இல்லை. இந்தத் தனி வசதியைத் தொழில் அதிபர்கள் விரும்புகின்ற காரணத்தால் இதற்கு ஆகின்ற செலவை அவர்களே ஏற்றுக் கொள்கிறார்கள். 13,82,962 ரூபாய் தொழில் அதிபர்கள் கட்டிய பணத்தில் இந்த வேலை நடைபெறுகிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று தனி லைன்களை அந்தத் தொழில் அதிபர்களுக்குக் கொடுப்பதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லையா ? இதனால் அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படுமா? அந்த மின் இணைப்புத் தொழிற்சாலைகளுக்குச் செல்லும்போது விவசாயிகளுக்குப் போதிய மின்சாரம் கிடைக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய மின் திட்டங்கள்.

*வினா எண். 422—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் புதிய திட்டத்திற்கு மத்திய அரசிடம் தமிழ் மாநில அரசு அனுமதி கோரியுள்ளதா ?

(ஆ) ஆமெனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) மத்திய அரசின் பதில் என்ன ?

1982 மார்ச் 9]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ), (ஆ) மற்றும் (இ) : கீழ்க்கண்ட திட்டங்கள் மத்திய அரசின் அனுமதி கோரி அனுப்பப்பட்டுள்ளன :

(1) வட சென்னை அனல் மின் திட்டம் 5×210 மெகா வாட் பிரிவுகள்.

(2) மேட்டூர் அனல் விரிவாக்கத் திட்டம் 2×210 மெகா வாட் பிரிவுகள்.

(3) தூத்துக்குடி விரிவாக்கத் திட்டம் ரூ. 1×500 மெகா வாட் பிரிவும், 1×210 மெகாவாட் பிரிவும்.

இத் திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மின் பற்றாக் குறை உள்ள மாநிலங்கள் போதிய மின் உற்பத்திக்காக மத்திய அரசிடம் அனுமதி கோரும்போது மத்திய அரசு என்ன அடிப்படையிலே அனுமதி வழங்குகிறது? அப்படி அனுமதி வழங்குவதில்லையானால் தாமதத்தைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அன்னுவல் பவர் சர்வே கமிட்டி என்ற ஒன்றினை மத்திய அரசு வைத்து அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்தின் பற்றாக் குறையையும் கணக்கிடுகிறார்கள். தென்னகத்தைப் பொறுத்த வரையில் மிகப் பெரும் பற்றாக்குறைக்கு ஆளாகி இருப்பது தமிழகம்தான். இந்த நிலையை எடுத்துச் சொல்லி அனல் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று மத்திய அரசை நாம் வற்புறுத்தி இருக்கிறோம். அந்த அடிப்படையிலே இந்தத் திட்டங்களைப் போட்டு கடந்த டிசம்பர் மாதத்திலே மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. விரைவிலே அனுமதி வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அனுமதி அளித்தால் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற எவ்வளவு காலமாகும்? இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் நம்முடைய தேவையில் எத்தனை சதவீதம் பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

[1982 மார்ச் 9

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நாம் இப்போது போட்டிருக்கிற திட்டங்களோடு, கேஸ் டர்பைன் என்ற அளவில் ஒரு 300 மெகாவாட்டில் திட்டம் ஒன்று போட்டிருக்கிறோம். இவைகள் அனைத்தும் சேர்த்து 2,480 மெகாவாட்டுக்கு வருகிறது. இதற்கு 1,345 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று எதிர்பார்க்கப்பெறுகிறது. அவர்கள் அனுமதி கொடுத்தால், 3 அல்லது 4 ஆண்டுகளில் நிறைவேற்றப் பெறும். இந்தத் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றி முடிக்கப் பெறும்போது, மின் தேவையில் பற்றாக்குறை இராது. நாம் தன்னிறைவை எய்துவோம் என்பதுதான் நிலை.

திருப்பனந்தாளில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 423—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் வட்டம் திருப்பனந்தாள் பேரூராட்சியில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசு செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) 1982–83 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் திருப்பனந்தாளில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டே இந்தத் துணைப் பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று வரையில் அந்த அலுவலகம் திறக்கப்படவில்லை. ஆகவே இந்த ஏப்ரல் மாதத்திலாவது அந்தப் பகுதியில், பதிவு செய்ய வருபவர்களின் நிலையைக் கவனத்தில் கொண்டு, இந்த அலுவலகம் திறக்கப்படுமா என்று அறிய விரும்புவதோடு, அந்த அலுவலக எல்லைக்குள் எத்தனை ரெவின்யூ கிராமங்கள் வரை பதிவு செய்யும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பனந்தாள் எல்லைக்குள் 30 ரெவின்யூ கிராமங்கள் இணைக்கப்பட இருக்கின்றன. அதில் ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 722 பத்திரங்கள்—டாக்குமெண்டுகள்